Koviloor Digital Library

4/5

அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி

துன்பங்கள் தீர

திருஅருட்பிரகாச வள்ளலார்

அருளிய

"அருள் நெறி"

Acc.No. A4027
R65-வள்ள

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!

வள்ளல் மலரடி வாழ்க! வாழ்க!

Koviloor Digital Library

LIBRARY, KOVILOOR A. No. 44027

திருஅருட்பா

அப்பாநான் வேண்டுதல் கேட்டு அருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம்நான் அன்புசெயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்கணும்நான் சென்றே
எந்தை நினது அருட்புகழை இயம்பியிடல் வேண்டும்
செப்பாத மேனிலைமேல் சுத்தசிவ மார்க்கம்
திகழ்ந்தோங்க அருட்ஜோதி செலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான்செயினும் நீபொறுத்தல் வேண்டும்
தலைவநினைப் பிரியாத நிலைமையும் வேண்டுவனே.

எவ்வுயிர்த் திரளும் என்னுயிர் எனவே
எண்ணிநல் இன்புறச் செயவும்
அவ்வுயிர்களுக்கு வரும் இடையூற்றை
அகற்றியே அச்சநீக்கிடவும்
செவ்வையுற்று உனது திருப்பதம் பாடிச்
சிவசிவ என்று கூத்தாடி
ஒவ்வுறு களிப்பால் அழிவுறாது இங்கே
ஓங்கவும் இச்சைகாண் எந்தாய்.

Koviloor Digital Library

4/5

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

கடவுள் சர்வ ஜீவ தயாபரர், சர்வ வல்லபம் உடையவர். ஆகையால் அவர் நம்மையும் சர்வ ஜீவதயவு உடையவர்களாய்ச் சர்வ வல்லபத்தையும் பெற்றுக் கொள்ளும்படி மனித தேகத்தில் வருவித்தார்.

எந்த ஜீவர்களிடத்தில் தயாவிருத்தியாகிய அருள் விசேஷம் விளங்குகின்றதோ அந்த ஜீவர்களிடத்தில் கடவுள் விளக்கம் விசேஷமாயிருக்கும், மற்றவர்களிடத்தில் காரியப்படாது.

ஆகவே கடவுள் திருவருளைப் பெறுவதற்கு நம் திருவருட்பிரகாச வள்ளல் பெருமானார் அருளிய இந்த அருள் நெறியினைக் கடைபிடித்து உய்வோமாக !

கடவுளது திருவருளை நாம் பெறுவதற்கு உபாயம் என்ன ?

புத்தி தத்துவத்தால் நன்மை தீமையை விசாரித்து, நன்மையே உருவாய் விளங்கும் பெரியோரைத் துணைக்கொண்டு, அவரால்

Koviloor Digital Library

கட்டளையிடும் திருப்பணியைக் கைக்கொண்டு இடையறாது செய்யில், அவ்வருளைப் பெறலாம்.

நன்மை தீமை என்பவை யாவை?

நன்மை தீமை என்பவை புண்ணிய பாவம்.

புண்ணியமென்பது ஆரம்பத்தில் செய்வதற்கும் அனுபவிப்பதற்கும் முயற்சிப்பதற்கும் துக்கமாயும், பின் சுகமாயும் விளங்கும்.

பாவமென்பது ஆரம்பத்தில் சுகமாயும் பின் துக்கமாயும் விளங்கும்.

புண்ணிய பாவங்கள் எவ்வாறு நம்மை வந்து அடைகின்றன?

மனம், வாக்கு, காயம் (உடல்) என்னும் மூன்றினாலும் நம்மை வந்தடைகின்றன.

மனத்தினால் வரும் பாவம்

- ★ பிறர் மனைவியை தனதாக்க நினைத்தல்.
- ★ அன்னியருடைய சொத்தை கிரகிக்க நினைத்தல்.
- ★ அன்னியருக்குத் தீங்குசெய்ய நினைத்தல்.
- ★ முடியாத காரியங்களை நினைத்து அக்காரியம் அன்னியர்களுக்கு முடிந்ததை நினைத்துப் பொறாமையடைதல்.

Koviloor Digital Library

4/5

வாக்கினால் வரும் பாவம்

★ பொய் சொல்லல்
★ கோள் சொல்லல்
★ புறங் கூறல்
★ வீணுக்கு அழுதல்

தேகத்தினால் வரும் பாவம்

★ பிறர் மனைவியை தழுவுதல்.

★ புசிக்க தகாத வேத விரோத ஆகாரங்களைப் (அசைவம்) புசித்தல்.

★ அன்னியர்களை இம்சை செய்தல்.

★ தீங்கு செய்கின்றவர்களைத் தடுக்காமல் அவர்களுக்கு உபகாரஞ் செய்தல்.

துன்பங்கள் சேராமல் தடுத்துக் கொள்வது எப்படி ?

மனம், வாக்கு, உடலினால் வந்தடையும் முன் சொன்ன 12 பாவச் செயல்களைச் செய்யாமல் பின்வரும் புண்ணியச் செயல்களைச் செய்து வந்தால் நமக்கு துன்பம் சேராமல் தடுத்துக் கொள்ளலாம்.

Koviloor Digital Library

மனத்தினால் வரும் புண்ணியம்

- அன்னியர்களுக்கு நன்மை உண்டாக நினைத்தல்.
- பொறாமை அடையாதிருத்தல்.
- அன்னியர் சொத்தைத் தனதாக்க எண்ணாதிருத்தல்
- தனது மனைவி தவிர அன்னியமான பெண்களைத் தாய் சகோதரி முதலியவர்களாகச் சிந்தித்தல்.

வாக்கினால் வரும் புண்ணியம்

- பொய் சொல்லாமை
- கோள் சொல்லாமை
- இன்சொல்லாடல்
- தோத்திரம் செய்தல்

தேகத்தினாலுண்டாகும் புண்ணியம்

அன்னியர்களுக்கு தீங்கு உண்டாகுங்கால் விலக்கல் முதலிய நன்மையான கிருத்தியங்கள் செய்தல். இவை தேகத்தால் உண்டாகும் புண்ணியம்.

Koviloor Digital Library

பஞ்ச மகா பாதகங்கள்

1. கள் 2. காமம் 3. கொலை 4. களவு 5. பொய் இவ்வைந்தும் கொடிய துக்கத்தை உண்டு பண்ணும். இவ்வைந்திலும் கொலை விசேஷ பாவம் எனினும் கள் உண்டவனுக்கு காமம் உண்டாகாமல் இராது, கொலை செய்யத் துணிவு வராமல் இராது. களவு செய்யாமல் இரான். பொய் பேச அஞ்சான். ஆகையால் இந்த ஐந்தையும் ஒழிக்க வேண்டியது அவசியம். இவற்றில் ஒன்றை அடைந்தவன் ஆனாலும் மற்றவை தொடராமல் இரா.

அறிந்து செய்யும் பாவங்கள்

அறிந்த பாவங்கள் செய்தபின், தனக்குப் பாவம் செய்ததாக எவ்வகையிலாவது தெரிந்தபின் நாம் பாவச் செய்கையை முன்னமே தெரிந்தும் மோகத்தாலும், மறதியாலும், அபிமானத்தாலும், அகங்காரத்தாலும், செல்வச் செருக்காலும், தாக்ஷன்ய உடன்பாட்டாலும், உணவு பற்றியும், புகழ் பற்றியும், வழக்கம் பற்றியும் பாவங்களைச் செய்கின்றோம்.

Koviloor Digital Library

அவை நீங்க :

அறிந்தே பாவங்களைச் செய்துவிட்டோமே என்று பச்சாதாபப் பட்டுப் பெரியோர்களையடுத்து, அவர்களால் நியமனம் செய்யப்படும் பிராயச்சித்தங்களைக் கைக்கொண்டு, அவ்வண்ணம் இச்சரீரத்தைத் தவத்தாலும் விரதத்தாலும் இளைக்கச் செய்வதுமன்றி, யாத்திரையாதிய மேற்கொண்டு, புண்ணிய ஸ்தலங்களில் சென்று வசித்து, இயன்ற அளவில் அன்ன விரயஞ் செய்தால் நீங்கும். மேலும், சத்தியற்றவர்களாயும் வார்த்திகர்களாயும் உள்ளவர்கள் மகான்களுக்குத் தொண்டு செய்தால் நீங்கும். மகான்கள் நேரிடாத பக்ஷத்தில், பச்சாதாபத்துடன் பாவகாரியங்களைச் செய்யாமலும், பாவிகளுடைய கூட்டத்திற் பழகாமலும், திருவருளைச் சிந்தித்துக் கொண்டிருந்தால் நீங்கும்.

அறியாது செய்யும் பாவங்கள்

அறியாத பாவங்கள் யாவெனில், நடக்குங் காலத்திலும், நீராடுங் காலத்திலும், சயன காலத்திலும் தனக்குத் தோன்றாமல் நேரிடும்

Koviloor Digital Library

பாவங்களாம். இதன்றி அவை மனதிற்குப் புலப்படாமலும் உண்டாகும்.

அவை நீங்க

இவைகள் யாவும் தினஞ் செய்யுஞ் ஜபத்தாலும், பாராயணத்தாலும், ஸ்தோத்திரத்தாலும், விருந்து உபசரித்தலாலும், தெய்வம் பராவலாலும் நீங்கும்.

பாவங்களின் பட்டியலைக்கூறும் மனுமுறைகண்ட வாசகம்

நல்லோர் மனத்தை	நடுங்கச் செய்தேனோ !
வலியவழக்கிட்டு	மானங்கெடுத்தேனோ !
தானங் கொடுப்போரைத்	தடுத்து நின்றேனோ !
கலந்த சிநேகரைக்	கலகஞ் செய்தேனோ !
மனமொத்த நட்புக்கு	வஞ்சகஞ் செய்தேனோ !
குடிவரி உயர்த்தி	கொள்ளை கொண்டேனோ !
ஏழைகள் வயிறு	எரியச் செய்தேனோ !
தருமம் பாராது	தண்டஞ் செய்தேனோ !
மண்ணோரம் பேசி	வாழ்வழித் தேனோ !
உயிர்க்கொலை செய்வோர்க்கு	உபகாரஞ்செய்தேனோ!
களவு செய்வோர்க்கு	உளவு சொன்னேனோ !
பொருளை இச்சித்துப்	பொய் சொன்னேனோ !
ஆசை காட்டி	மோசம் செய்தேனோ !
வரவுபோக் கொழிய	வழியடைத்தேனோ !

Koviloor Digital Library

வேலையிட்டுக் கூலி	குறைத்தேனோ !
பசித்தோர் முகத்தைப்	பாராதிருந்தேனோ!
இரப்போர்க்குப் பிச்சை	இல்லை யென்றேனோ !
கோள் சொல்லி	குடும்பங் கலைத்தேனோ!
நட்டாற்றில் கையை	நழுவ விட்டேனோ !
கலங்கி ஒளிந்தோரைக்	காட்டிக் கொடுத்தேனோ!
கற்பழிந்தவளைக்	கலந்திருந்தேனோ!
காவல் கொண்டிருந்த	கன்னியை அழித் தேனோ!
கணவன் வழி நிற்போரை	கற்பழித் தேனோ!
கருப்பம் அழித்துக்	களித்திருந் தேனோ!
குருவை வணங்கக்	கூசி நின்றேனோ!
குருவின் காணிக்கை	கொடுக்க மறந்தேனோ!
கற்றவர் தம்மைக்	கடுகடுத் தேனோ!
பெரியோர் பாட்டில்	பிழை சொன்னேனோ!
பட்சியைக் கூண்டில்	பதைக்க அடைத்தேனோ!
கன்றுக்குப் பாலூட்டாது	கட்டி வைத்தேனோ!
ஊன்சுவை உண்டு	உடலை வளர்த்தேனோ !
கல்லும் நெல்லும்	கலந்து விற்றேனோ!
அன்புடை யவர்க்குத்	துன்பஞ் செய்தேனோ !
குடிக்கின்ற நீருள்ள	குளத்தைத் தூர்த்தேனோ!
வெய்யிலுக்கு ஒதுங்கும்	விருக்ஷத்தை அழித்தேனோ!
பகைகொண்டு அயலோர்	பயிரழித்தேனோ!
பொது மண்டபத்தை	போய் இடித்தேனோ !

Koviloor Digital Library

ஆலயக் கதவை அடைத்து வைத்தேனோ!
சிவனடி யாரைச் சீறி வைதேனோ!
தவம் செய்வோரைத் தாழ்வு சொன்னேனோ!
சுத்த ஞானிகளைத் தூஷணஞ் செய்தேனோ!
தந்தை தாய்மொழியைத் தள்ளி நடந்தேனோ!
தெய்வம் இகழ்ந்து செருக்கடைந்தேனோ!
என்ன பாவம் செய்தேனோ இன்னதென்றறியேனே!

மேற்கூறிய பாவங்களை நாம் செய்யாதிருக்க வேண்டும்.

ஜீவகாருண்ய ஒழுக்கமே கடவுள் வழிபாடு

1. ஜீவகாருண்ய ஒழுக்கம் என்பது என்ன எனில்?

ஜீவர்களுக்கு ஜீவர்கள் விஷயமாக உண்டாகின்ற ஆன்ம உருக்கத்தைக் கொண்டு தெய்வ வழிபாடு செய்து வாழ்தல் என்று அறியவேண்டும்.

2. ஜீவர்கள் விஷயமாக ஆன்ம உருக்கம் எப்போது உண்டாகும்? எனில்.

ஜீவர்கள் பசி, தாகம், பிணி, இச்சை, எளிமை, பயம், கொலை இவைகளால் துக்கத்தை அனுபவிக்கக் கண்ட போதாயினும், கேட்ட போதாயினும், இவ்வாறு உண்டாகுமென்று

Koviloor Digital Library

அறிந்த போதாயினும் ஆன்ம உருக்கம் உண்டாகும் என்று அறிய வேண்டும்.

3. ஜீவகாருண்ய ஒழுக்கத்தினால் கடவுள் அருளைப் பெறக் கூடுமல்லது வேறு எந்த வழியாலும் சிறிதும் பெறக்கூடாது என்று உறுதியாக அறிதல் வேண்டும்.

4. ஜீவகாருண்யம் விளங்கும்போது அறிவும் அன்பும் உடனாக நின்று விளங்கும் அதனால் உபகார சக்தி விளங்கும். அந்த உபகார சத்தியால் எல்லா நன்மைகளும் தோன்றும்.

5. ஜீவகாருண்யம் மறையும்போது அறிவும் அன்பும் உடனாக மறையும். அதனால் உபகார சக்தி மறையும். உபகார சத்தி மறையவே எல்லாத் தீமைகளும் தோன்றும்.

6. ஆகலில், புண்ணியம் என்பது ஜீவகாருண்யம் ஒன்றே என்றும், பாவம் என்பது ஜீவகாருண்யம் இல்லாமை ஒன்றே என்றும் அறியப்படும்.

7. பசித்தவர்களுக்குப் பசியாற்றுவித்து இன்பத்தை உண்டு பண்ணுகின்ற ஜீவகாருண்ய ஒழுக்கமாகிய மேலான விரதமானது தேவர்கள், மனிதர்கள்,

Koviloor Digital Library

பிரம்மச்சாரிகள், சமுசாரிகள், தபசிகள், சந்நியாசிகள், ஆண் ஜாதியர், பெண் ஜாதியர், வார்த்திபர், வாலிபர், உயர்ந்தோர், தாழ்ந்தோர் முதலிய யாவராலும் அவசியம் செய்யத்தக்கது என்பது கடவுள் ஆணை என்று அறிய வேண்டும்.

8. அறிவு விளங்கிய ஜீவர்களுக்கு எல்லாம் ஜீவகாருண்யமே கடவுள் வழிபாடு என்றும் அறியப்படும்.

9. நம்முடைய தலைவராகிய கடவுளை நாமடைவதற்கு அவர் எழுந்தருளியிருக்கும் கோட்டையின் சாவியாகிய அருள் வேண்டும். அவ்வருள் அன்பினாலல்லது வேறு வகையில் அடைவது அரிது. அவ்வன்பு ஜீவகாருண்யத்தால் அல்லது வேறு வகையில் வராது. ஜீவகாருண்யத்தின் லாபமே அன்பு. ஜீவகாருண்யம் உண்டானால் அன்புண்டாகும். அன்புண்டானால் அருளுண்டாகும். அருள் உண்டானால் சிவானுபவம் உண்டாகும்.

"ஜீவகாருண்ய ஒழுக்கமே
மோட்ச வீட்டின் திறவுகோல்"

Koviloor Digital Library

மாமிச உணவை மறுப்பதே மனித நெறி

திருவருட்பிரகாச வள்ளல் பெருமானார்

ஒரு ஜீவனைக் கொன்று ஒரு ஜீவனுக்கு மாமிசத்தால் பசியாற்றுதல், ஜீவகாருண்ய ஒழுக்கமே அல்லவென்றும், கடவுள் சம்மதமும் அல்லவென்றும், சத்தியமாக அறிய வேண்டும்.

மேலும் ஆணை பெண்ணாக மாற்றுவதும், பெண்ணை ஆணாக மாற்றுவதும், இறந்தவரை மீண்டும் உயிர் பெற்று எழுப்புதலும் போன்ற சித்துக்களைப் பெற்றவராக இருந்தாலும், அவர் மாமிசம் உண்ணும் கருத்துடையவராக இருந்தால் அவரை ஞானி என்று கூறக் கூடாது. இது இறைவன் மீது ஆணை!

ஜீவகாருண்ய ஒழுக்கமில்லாமல் ஞானம், யோகம், தவம், விரதம், ஜெபம், தியானம், முதலியவைகளை செய்கின்றவர்கள் கடவுளருளுக்குச் சிறிதும் பாத்திரம் ஆகார்கள் அவர்களை ஆன்ம விளக்கம் உள்ளவர்களாகவும் நினைக்கப்படாது. ஜீவகாருண்யம் இல்லாது செய்யப்படுகிற செய்கைகளெல்லாம்

Koviloor Digital Library

பிரயோஜனமில்லாத மாயாஜாலச் செய்கைகளே ஆகுமென்று அறிய வேண்டும்.

ஒரு உடல் என்பது அந்த உயிர் குடியிருக்கும் வீடு என்பதை மறந்துவிடலாகாது. எல்லா உயிர்களிடத்தும் கடவுள் வியாபித்து இருப்பதை அறிதலே ஈசுவர பக்தியாகும்.

திருவள்ளுவர்

அறவினை யாதெனின் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாந் தரும். (குறள்-321)

விளக்கம்: அறம் முழுவதும் அடங்கிய செயல் யாது என வினவின், எந்த ஒரு உயிரையும் கொல்லாமையாகும். பிற உயிர்களைக் கொல்லுதல், பாவச் செயல்கள் யாவற்றையும் ஒருங்கே தரும்.

கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாள்மேல்
செல்லாது உயிருண்ணுங் கூற்று. (குறள்-326)

விளக்கம்: கொலை செய்யாமையை வாழ்வில் அறநெறியாகக் கொண்டவரை மரணம் கூட அவரிடம் செல்ல தயங்கி நிற்கும்.

Koviloor Digital Library

தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை, (குறள்-327)

விளக்கம்: தன் உயிரையே இழக்க நேர்ந்தாலும், பிற இன்னுயிரை அதன் உடம்பிலிருந்து போக்கும் செயலைச் செய்ய வேண்டா.

உயிர்உடம்பின் நீக்கியார் என்ப செயிர்உடம்பின்
செல்லாத்தீ வாழ்க்கை யவர். (குறள்-330)

விளக்கம்: நோய் நிறைந்த உடம்பும், வறுமையும், இழிந்த வாழ்க்கையை வாழ்பவரும், முன்பு கொலை பல செய்து உயிர்களை உடம்புகளில் இருந்து நீக்கினவர் என்று அறிந்தோர் கூறுவர்.

தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிது ஊனுண்பான்
எங்ஙனம் ஆளும் அருள் (குறள்-251)

விளக்கம்: தன் உடலை வளர்ப்பதற்காக வேறொரு உயிரின் உடலை உணவாக்கிக் கொள்பவர் எவ்வாறு அருளைப் பெறமுடியும்.

Koviloor Digital Library

உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்
புண்ணது உணர்வார்ப் பெறின் (குறள்-257)

விளக்கம்: புலால் (அசைவம்) என்பது ஓர் உடம்பின் புண் என்பதை நன்கு ஆராய்ந்து உணர்வோர்க்கு அதை உண்ணாமலிருக்க வேண்டும் என்பதும் புலப்படும்.

அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று. (குறள்-259)

விளக்கம்: நெய் போன்ற பொருள்களைத் தீயிலிட்டு ஆயிரம் வேள்விகளை நடத்துவதைவிட ஓர் உயிரையும் கொன்று திண்ணாமலிருப்பது நல்லது.

கொல்லான் புலாலை மறுத்தானை எல்லா
உயிரும் கைகூப்பித் தொழும். (குறள்-260)

விளக்கம்: எந்த ஒரு உயிரையும் கொல்லாமலும் அதன் மாமிசத்தை உண்ணாமலும் வாழ்கின்றவனை உலகத்தில் உள்ள எல்லா உயிர்களும் கைகூப்பி வணங்கும்.

★★★★

Koviloor Digital Library

திருமூலர்

கொன்றிலாரைக் கொல்லச் சொல்லித் தூண்டினார்
தின்றிலாரைத் தினச்சொலித் தெண்டித்தார்
பன்றியாய்ப் படியிற் கிடந்து ஏழ்நரகு
ஒன்றுவார் அரண் ஆணையிது உண்மையே

– திருமந்திரம்

உயிர்க்கொலை செய்யாமல் வாழ்பவர்களை கொலை செய்யும்படி தூண்டுபவர்களும், மாமிசம் உண்ணாதவர்களை உண்ணச் சொல்லி வற்புறுத்துபவர்களும் இப்பூமியில் ஏழு பிறவிகளிலும் பன்றியாய் பிறந்து நரக வேதனையை அனுபவிப்பர். இது இறைவன் இட்ட ஆணையாகும். இது உண்மையே என்று திருமூலர் மிகவும் அழுத்தமாக கூறுகிறார்.

ஆதி சங்கரர்

ஜீவகாருண்யம் (உயிர் இரக்கம்) உள்ளவர்களிடம் தெய்வங்களும் பணிந்து நிற்கும்.

Koviloor Digital Library

புத்தர்

புலால் என்பது புண், தூயதன்று, புலால் ஒருடம்பின் புண் என்று அதன் உண்மையை உணராமையினால் அதனை ஒரு சாரார் உண்கின்றனர். புலால் உண்பது இழிந்தது. உறுதியாய் நினைத்துப் பார்ப்பவருக்கு இது புலப்படும்.

பகவான் மஹாவீரர்

எல்லா உயிர்களிடத்திலும் அன்பு செலுத்துங்கள், உயிரினம் ஒவ்வொன்றுக்கும் உயிர் இன்றியமையாதது. எனவே எவ்வுயிர்க்கும் தீங்கு செய்யாதீர்கள். அஹிம்சை நெறி, சுயக்கட்டுப்பாடு, எளிமை ஆகியவை மிக உயர்ந்த சத்திய இலட்சியத்திற்கு வழி வகுப்பவை, பிற உயிர்களில் ஏதேனும் ஒன்றுக்கு தீங்கு செய்பவர், முதலில் தம்முயிர்க்கே தீங்கு செய்து கொள்கிறார்.

★★★

Koviloor Digital Library

திருவருட்பா தோத்திரப் பாடல்கள்

அருள்விளக்கே அருட்சுடரே அருட்சோதிச் சிவமே
அருளமுதே அருள்நிறைவே அருள்வடிவப் பொருளே
இருள்கடிந்தென் உளமுழுதும் இடங்கொண்ட பதியே
என்அறிவே என்உயிரே எனக்கினிய உறவே
மருள்கடிந்த மாமணியே மாற்றறியாப் பொன்னே
மன்றில்நடம் புரிகின்ற மணவாளா எனக்கே
தெருள்அளித்த திருவாளா ஞானஉரு வாளா
தெய்வநடத் தரசேநான் செய்மொழிஏற் றருளே.

பணிந்தறியேன் அன்புடனே பாடுதலும் அறியேன்
படித்தறியேன் கேட்டறியேன் பத்தியில்பூ மாலை
அணிந்தறியேன் மனம்உருகக் கண்களின்நீர் பெருக
அழுதறியேன் தொழுதறியேன் அகங்காரம் சிறிதும்
தணிந்தறியேன் தயவறியேன் சத்தியவா சகமும்
தான்அறியேன் உழுந்தடித்த தடியதுபோல் இருந்தேன்
துணிந்தெனக்கும் கருணைசெய்த துரையேஎன் உளத்தே
சுத்தநடம் புரிகின்ற சித்தசிகா மணியே.

Koviloor Digital Library

பரசிவ வணக்கம்

அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்பெனும் குடில்புகும் அரசே
அன்பெனும் வலைக்குட் படுபரம்பொருளே
அன்பெனும் கரத்தமர் அமுதே
அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடலே
அன்பெனும் உயிர்ஒளிர் அறிவே
அன்பெனும் அணுவுள் அமைந்தபே ரொளியே
அன்புருவாம் பரசிவமே!

சுத்த சன்மார்க்க பிரார்த்தனை

ஒருவன் பிரார்த்தனை செய்வதில் அவனுக்காக மட்டும் செய்வது சரியல்ல. இந்த உலகமெல்லாம் வாழும்படி பிரார்த்தனை செய்தல் வேண்டும். அப்படிச் செய்வதால் அதில் ஒருவனுக்கு வேண்டியவையெல்லாம் அடங்கிவிடுகின்றன. பிரார்த்தனை செய்ய வேண்டுமானால் இப்படித்தான் செய்யவேண்டும்.

Koviloor Digital Library

44027

வள்ளலார் சன்மார்க்க ஞான முரசு

வள்ளல் பெருமானார் மற்றும் ஞானியர்களின்
கருத்துகள் அடங்கிய ஆன்மீக மாத இதழ்

ஆண்டு சந்தா ரூ. 120/- மட்டுமே.

தொடர்புக்கு : 9894010007

சமூக வலைதளங்கள்

: www.vallalarmission.org

: Vallalar Mission Org
Vallalar Spirituality
Vallalar Vaithiyam
Vallalar Speeches
Vallalar Mission Songs
Vallalar Mission Kids

: Vallalar Mission
Vallalar Spirituality

: vallalartrust@gmail.com

: Vallalar Mission

Koviloor Digital Library

அருட்பெருஞ்ஜோதி வள்ளலார் அறக்கட்டளையின் அறப்பணிகள்

அன்னதானம்

தினசரி சாதுக்கள், பக்தர்கள் மற்றும் ஏழை எளியோர்களுக்கு பசியாற்றுவித்தல் (அன்னதானம்) திருவண்ணாமலை மற்றும் பழனியில் நடைபெற்று வருகிறது.

தொடர்புக்கு : +91 94874 54688

கோசாலை - பசுக்கள் பராமரிப்பு

தொடர்புக்கு : +91 94874 54688

தியான வகுப்புகள்

மாநிலம் முழுவதும் உள்ள மாவட்டங்களில் இலவச தியான பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. தொடர்புக்கு : +91 98940 10007

இலவச புத்தகங்கள்

பொதுமக்கள் பயனுறும் வகையில் நற்பண்புகள், நற்குணங்கள், உயர்ந்த நெறிகளை எளிய முறையில் உணர்த்தும் வள்ளல் பெருமானார் மற்றும் பல்வேறு ஞானிகளின் கருத்துக்கள் அடங்கிய புத்தகங்களை ஆன்மீக விழாகளில் இலவசமாக வழங்கப்படுகிறது. இந்த அறப்பணியில் பங்கேற்க விரும்புவோர் தொடர்புக்கு : +91 9894010007.

Koviloor Digital Library

தொடர்புக்கு

அருள்திரு.பாபு சாது

அருட்பெருஞ்ஜோதி வள்ளலார் அறக்கட்டளை

பதிவு எண் 885/09

சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்

552/6A, கோசாலை கிராமம், வாயு லிங்கம் எதிரில்,
கிரிவலப்பாதை, அடிஅண்ணாமலை (PO).,
திருவண்ணாமலை-606 604.
Cell : +91 94434 89849, +91 98940 10007.

சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்

பெருமாள் மலை அடிவாரம், அர்த்தநாரிபாளையம்.,
ரெட்டியாரூர் (PO)., **பொள்ளாச்சி-642007.**
Cell : +91 98940 10007, +91 95977 19535.

சமரச சுத்த சன்மார்க்க சத்திய தருமச்சாலை

கொடைக்கானல் பிரிவு ரோடு, கிரி வீதி, **பழனி-624601.**
Cell : +91 80723 64761, +91 98940 10007.

மேலும் விபரங்களுக்கு :
+91 - 98940 10007

பசித்திரு! தனித்திரு! விழித்திரு!